# Pre Board Examination - 2, 2018-2019

**Tamil**

**Grade: 10** **Time: 3 Hours**

**Date: 31.01.2019** **Max. Marks: 80**

---

**இக் கேள்வித் தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது:-**

**பிரிவு: அ – படித்தல் - 15 மதிப்பெண்கள்**

**பிரிவு: ஆ – எழுதுதல் - 14 மதிப்பெண்கள்**

**பிரிவு: இ – இலக்கணம் - 15 மதிப்பெண்கள்**

**பிரிவு: ஈ – இலக்கியம் / தமிழ்ப் பாடநூல் - 36 மதிப்பெண்கள்**

- ✓ **எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டும்.**
- ✓ **ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிக்கப் பட்டுள்ளன.**

---

**பிரிவு: அ – படித்தல்-15 மதிப்பெண்கள்**

**I. கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும்.** [5X1=5]

இல்வாழ்க்கை வாழ்வோர்க்கும் பொருள் தேடுவது ஒரு கடமையாக இருக்கிறது. அதற்காக அவர்கள் பற்பல தொழில் வகைகளை மேற்கொண்டிருந்தார்கள். உழவு, வணிகம், நெசவு முதலியவை அத்தொழில் வகைகளில் சில. இங்கே மலைகளும் காடுகளும் கடற்கரைகளும் வளமாக இருக்கின்றன. வெற்று வெளிகளும் உண்டு. அங்கங்கே இருந்த மக்கள் அவ்வவிடங்களுக்குக்குத் தக்க தொழில்முறைமைகளை உன்னித்துப் பார்த்துத் தெரிந்து கொண்டார்கள். மலைப்பக்கங்களில் இருப்பவர்கள் தேனெடுப்பது, தினை விதைப்பது, கிழங்ககழ்வது முதலிய தொழில்களையும் வயலிடங்களில் இருப்பவர்கள் உழவு செய்வது, நகரமைப்பது, ஆட்சி புரிவது முதலிய தொழில்களையும் கடற்கரைகளில் இருப்பவர்கள் முத்துக் குளிப்பது, உப்பு விளைப்பது மரக்கலத்திலேறி அலைகடலில் சென்று வாணிகம் செய்வது முதலிய தொழில்களையும் செய்து பொருள்தேடி வந்தார்கள். அறிவு முதிர முதிர இன்னும் எத்தனையோ வகையான தொழிகளை உணர்ந்து, வளம் மிகுந்து வாழ்ந்தனர்.

**வினாக்கள்**

1. இல்வாழ்க்கை வாழ்வார்க்கு எது ஒரு கடைமையாக உள்ளது?

அ) அறம் செய்தல் ஆ) பொருள் தேடுவது

இ) மறம் செய்தல் ஈ) பொன்னைத் தேடுவது

2. பொருள் தேட மக்கள் என்ன செய்தார்கள்?

அ) பற்பல வேலைகள் ஆ) பற்பல கைவினைத் தொழில்கள்

இ) பற்பல தொழில்கள் ஈ) பற்பல கடமைகள்

3. தொழில் வகைகள் யாவை?

அ) உழவு, வணிகம் மற்றும் சமையற்கலை

ஆ) உழவு, வணிகம் மற்றும் பட்டு நெய்தனர்

இ) உழவு, வணிகம் மற்றும் முத்துக்குளித்தல்

ஈ) உழவு, வணிகம் மற்றும் நெசவு

4. மக்கள் எப்படி தொழில் கற்றுகொண்டார்கள்?

அ) உன்னித்துப் பார்த்து ஆ) கவனித்துப் பார்த்து

இ) பழகிப் பார்த்து ஈ) கவனமுடன் பார்த்து

5. வயலிடங்களில் இருப்பவர்கள் எத்தொழில் செய்தார்கள்?

அ) உழவு, ஆட்சி புரிவது ஆ) உழவு, நகரமைப்பு, ஆட்சி புரிவது

இ) உழவுத் தொழில் மட்டும் ஈ) ஆட்சி புரிவது மட்டும்

II. **கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும்.** [5X1=5]

நாம் வாழும் இன்றைய சமுதாயத்தில் தோன்றும் அரசியல், பொருளாதார, சமுதாய சமயச்சிக்கல் பொரும்பாலான மக்களை மூச்சுத் திணறச் செய்கின்றன. வாழ்க்கையில் நம்பிக்கையிழந்து பலர் சோர்ந்து விடுகின்றனர். இறைவன் மீது அசையா நம்பிக்கை கொண்டு, சோதனைகளைக் கண்டு அஞ்சாமல் செயல்படுவர்கள்; வாழ்க்கையை ஓர் அரும்பெரும் சாதனையாக மாற்றிக் கொள்ள முடியும். இதற்கு மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டு முன்பு எப்பொழுதும் இருந்ததைவிட இப்பொழுது மகாத்மாவின் வாழ்க்கையை அறிந்துக் கொள்ளும் ஆர்வம் மக்களிடம் மிகுந்திருக்கிறது. ஆங்கிலத்தில் வெளிவந்த ‘காந்தி’ என்ற திரைப்படம் உலக மக்களைத் தட்டி எழுப்பியிருக்கின்றது. இப்படியும்

ஒருவர் வாழ்ந்தாரா? என்ற கேள்வி எங்கும் எதிரொலிக்கின்றது. அகிம்சை, சத்தியம் என்ற அடிப்படையில் கட்டப் பெற்ற கோபுரம் மகாத்மாவின் வாழ்க்கை. அதனைத் திரும்பத் திரும்ப படிக்கும் பொழுது நமது வாழ்க்கையில் தெளிவு பிறக்கும். காந்தியடிகள் மறைந்து 70 ஆண்டுகள் கடந்திருக்கின்றன. அவர் கண்ட வகையில் பாரதநாடு இன்னும் உருவாகவில்லை. அதற்கு பாடுபட வேண்டும்.

**வினாக்கள்:**

1. எத்திரைப்படம் மக்களை தட்டி எழுப்பியது?

   அ) உலக உத்தமர் காந்தி ஆ) அம்பேத்கர்

   இ) மகாத்மா காந்தி ஈ) காந்தி

2. யாரால் வாழ்க்கையை சாதனையாக மாற்றி கொள்ள முடியும்?

   அ) இறைவன் மீது நம்பிக்கை கொண்டிருப்பவர்

   ஆ) இறைவன் மீது நம்பிக்கையில்லாதவர்

   இ) இறைவன் மீது அசையா நம்பிக்கை கொண்டு இருப்பவர்

   ஈ) இறைவன் மீது சிறிதளவு நம்பிக்கை கொண்டு இருப்பவர்

3. மகாத்மாவின் வாழ்க்கை கோபுரம் எதன் அடிப்படையில் கட்டப் பெற்றது?

   அ) உண்மை, நேர்மை ஆ) அகிம்சை, சத்தியம்

   இ) விடாமுயற்சி ஈ) அகிம்சை, கடமை

4. காந்தியடிகள் மறைந்து எவ்வளவு ஆண்டுகள் ஆயிற்று?

   அ) 44 ஆண்டுகள் ஆ) 70 ஆண்டுகள்

   இ) 54 ஆண்டுகள் ஈ) 52 ஆண்டுகள்

5. யாருடைய வாழ்க்கையை நாம் திரும்ப திரும்ப படிக்கும்பொழுது தெளிவு பிறக்கும்?

   அ) மகாத்மாவின் வாழ்க்கை ஆ) காமராசரின் வாழ்க்கை

   இ) அண்ணாவின் வாழ்க்கை ஈ) நேருவின் வாழ்க்கை

**III. கீழ்வரும் பத்தியைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக.** [1X5=5]

அறிவு வளர்ச்சிக்கு நாம் விரும்பும் நூல்களையெல்லாம் நாமே விலைகொடுத்து வாங்கிட முடியாது. இக்குறையை நூலகம் போக்குகிறது. நூலகத்தால் நாட்டின் நல்லுறவு வளரும். படிக்கும் பழக்கம் வளரும். சிக்கனத்தின் சீர்விளங்கும். காலத்தின் நற்பயன் தெளிவாகும். உலக அறிவு ஓங்கும், செய்தி அறிவு சேகரமாகும். கட்டுரை அறிவு கிட்டும். கவிதைச் சுவை விளங்கும். கதையின்

மாண்பு புரியும். தொடர்கதையின் இயல்புகள் தெரியும். நூலகத்தால் படிப்பாளியாகவும் ஆகலாம்; படைப்பாளியாகவும் ஆகலாம். நூல் நிலையம் வழங்காத பயனை வேறு எதுவுமே வழங்க முடியாது. நற்பண்புகள், அடக்கம், எளிமை, பொறுமை, வன்மை முதலிய மனப்பயிற்சிகளுக்கும் நூல்நிலையம் வழிகாட்டும். நூல்நிலையத்தால் மாந்தர்தம் வாழ்வு முழுமை பெறுகிறது.

**பிரிவு: ஆ - எழுதுதல் - 14 மதிப்பெண்கள்** [1X6=6]

IV. அ) உன் பகுதியில் கஜா புயலின் பாதிப்பால் மின்கம்பங்கள் சாய்ந்ததால், மின்சாரம் தடைப்பட்டதை குறித்தும், மின்சாரத் தேவை குறித்தும் மின்துறை இயக்குநருக்கு கடிதம் ஒன்று எழுதுக.

**(அல்லது)**

ஆ) பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதவிருக்கும் உன் தோழன் / தோழிக்கு தேர்வு எழுதும் முறை குறித்து, அறிவுரைக் கூறி கடிதம் ஒன்று எழுதுக.

**இரண்டு கடிதங்களிலும் உமது முகவரி:**

- குமனன் / குழலி, 50. சோழன் நகர், முதல் தெரு,சென்னை. எனக் கொள்க.

**V. ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.** [1X8=8]

அ) முன்னுரை – பெருகி வரும் போக்குவரத்து – மக்கள்நெருக்கம் – சாலைவிதிகளைப் பின்பற்றாமை – சாலை விபத்துகளின் உயர்வு – தடுக்கும் வழிமுறைகள் – சட்டமும் மனமாற்றமும் – முடிவுரை.

ஆ) கோடைகாலமும் குளிர்பானங்களும் – இயற்கையான குளிர் பானங்கள் – எளிமையான குளிர்பானங்கள் – செயற்கையான குளிர்பானங்கள் – அவற்றால் ஏற்படும் செலவுகளும் பக்கவிளைவுகளும் – உடல் நலமே உயிர் நலம்.

இ) கல்வி – கல்வியின் சிறப்புகள் – கற்றவர் சிறப்பு – கல்லாதவர் இழிவு – கல்வியின் பயன்கள் – சங்ககாலக் கல்வி – சங்ககாலப் புலவர்கள் – சங்க இலக்கியங்கள்.

## பிரிவு: இ - இலக்கணம் - 15 மதிப்பெண்கள்

**VI. சான்று தருக.** (எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும்) [3X1=3]

1. முல்லை நிலத்தின் விலங்குகள்

அ) முயல் மான் ஆ) முதலை சுறா

இ) புலி கரடி ஈ) எருமை நீர்நாய்

2. இயல்புப்புணர்ச்சி

அ) மலைப் பழம் ஆ) சொற்போர்

இ) தமிழ்மொழி ஈ) பூந்தொட்டி

3. இரட்டைக் கிளவி

அ) போ போ ஆ) கலர் கலர்

இ) மாடு மாடு ஈ) பளபள

4. ஆய்த குறுக்கம்

அ) முள் தீது ஆ) முஃடீது

இ) முள்றீது ஈ) முள்ரீது

5. கூவிளங்காய்

அ) மணிவாசல் ஆ) இயல்பென்பான்

இ) மாசிலாதான் ஈ) விளக்கல்ல

**VII. கூறியவாறு செய்க.** (எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும்) [3X1=3]

1. கிளி போன்ற மொழி (உவமைத் தொகையாக்குக)

அ) கிளியொப்ப மொழி ஆ) கிளி மொழி

இ) கிளியன்ன மொழி ஈ) கிளியுறழ மொழி

2. போலும் (மகர குறுக்கம்)

அ) போன்ம் ஆ) போதும்

இ) போண்ம் ஈ) போனும்

3. பரமமூர்த்தி - அசை பிரித்து வாய்ப்பாடு கூறுக.

அ) நிரை + நேர் + நேர் – புளிமாங்காய்

ஆ) நே + நேர் + நேர் – தேமாங்காய்

இ) நேர் + நிரை + நேர் - கூவிளங்காய்

ஈ) நிரை + நிரை + நேர் – கருவிளங்காய்

4. நெய்தல் – சரியானதைப் பொருத்துக.

அ) முருகன் ஆ) வருணன்

இ) இந்திரன் ஈ) கொற்றவை

5. கருங்குழி – புணர்ச்சி விதி கூறுக.

அ) ஈறு போதல் இனமிகல்

ஆ) தன்னொற்றிரட்டல் இடையுகரம் இ ஆதல்

இ) ஆதி நீடல் இனமிகல்

ஈ) ஈறுகெடுதல்

**VIII. நிரப்புக.** (எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும்) [3X1=3]

1. இளவழகன் வந்தான் இது ___________ தொடர்.

அ) குறிப்பு ஆ) வெளிப்படை

இ) எதுவுமில்லை ஈ) ஒன்றொழிப் பொதுச்சொல்

2. சொல்லுக்கு முதலில் ஐகாரம் _________________ மாத்திரை அளவு ஒலிக்கும்.

அ) ஒன்றரை ஆ) கால்

இ) ஒன்று ஈ) இரண்டு

3. மருத நிலம் என்பது ___________.

அ) கடலும் கடல் சார்ந்த நிலம் ஆ) மலையும் மலை சார்ந்த நிலம்

இ) வயலும் வயல் சார்ந்த நிலம் ஈ) காடும் காடு சார்ந்த நிலம்

4. பெரும் பொழுதுகள் மொத்தம்_________ வகைப்படும்.

அ) எட்டு வகைப்படும் ஆ) ஆறுவகைப்படும்

இ) மூவகைப்படும் ஈ) பத்துவகைப்படும்

5. இரட்டுற மொழிதல் அணி ________ வகைப்படும்.

அ) நால்வகைப்படும் ஆ) ஏழுவகைப்படும்

இ) பத்துவகைப்படும் ஈ) இருவகைப்படும்

**IX. இலக்கணக் குறிப்புத் தருக.** (எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும்) [3X1=3]

1. சதுரக்கல்

அ) பண்புப் பெயர்ப் புணர்ச்சி ஆ) குற்றியலுகரப் புணர்ச்சி

இ) மகர ஈற்றுப்புணர்ச்சி ஈ) விகாரப்புணர்ச்சி

2. வெண்பா எவ்வாறு வரும்?

அ) கலித்தளை பெற்று வரும்

ஆ) இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை பெற்று வரும்.

இ) ஆசிரியத்தளைகளைப் பெற்று வரும்.

ஈ) தளைகளில் தனிப்பட்ட நியதிகள் கிடையாது.

3. ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய அகவொழுக்கம்

அ) முதற்பொருள்    ஆ) கருப்பொருள்

இ) புறப்பொருள்    ஈ) உரிப்பொருள் எனப்படும்.

4. எருதா? பசுவா?

அ) கொடை வினா    ஆ) ஐய வினா

இ) ஏவல் வினா    ஈ) அறியா வினா

5. தேன் தமிழ்

அ) உருவகம்    ஆ) வினைமுற்று

இ) பெயரெச்சம்    ஈ) உவமை

**X. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (எவையேனும் **மூன்றனுக்கு)**

1. அ) விகாரப்புணர்ச்சி ஐந்து வகைப்படும்    [3X1= 3]

ஆ) விகாரப்புணர்ச்சி மூவகைப்படும்

இ) விகாரப்புணர்ச்சி இருவகைப்படும்

ஈ) விகாரப்புணர்ச்சி ஆறு வகைப்படும்

2. அ) ஆசிரியப்பா ஈற்றடி முச்சீர் ஏனைய அடிகள் நாற்சீராய் வரும்

ஆ) ஆரியப்பா நான்கடிச்சீர்களைப் பெற்று வரும்.

இ) ஆரியப்பா இரண்டடி எழுச்சீர்களைப் பெற்று வரும்.

ஈ) ஆரியப்பா மூன்றடிச் சிற்றெல்லையும் பாடும் புலவரின் கருத்திற்கேற்பப் பல அடிகளும் பெற்று வரும்.

3. அ) ஓர் எழுத்து தனித்து வருவது சொல்.

ஆ) பல எழுத்துகள் தொடர்ந்து வருவது சொல்.

இ) ஓர் எழுத்தோ பல எழுத்துகளோ தொடர்ந்து வருவது சொல்.

ஈ) ஓர் எழுத்தோ பல எழுத்துகளோ தொடர்ந்து வந்து பொருள் தருவது சொல்.

4. அ) ஒளகாரம் மொழிக்கு முதலில் மட்டும் வரும்

ஆ) ஒளகாரம் மொழிக்கு முதல், இடையில் மட்டும் குறுகும்

இ) ஒளகாரம் மொழிக்கு இடையில் மட்டும் குறுகும்

ஈ) ஒளகாரம் மொழிக்கு முதல், இடை, கடையில் மட்டும் குறுகும்

5. அ) முற்றுப் பெறாத வினைச்சொற்கள் வேறொரு வினைமுற்றைக் கொண்டு முடிந்தால் அது வினைமுற்று.

ஆ) முற்றுப் பெறாத வினைச்சொற்கள் வேறொரு வினைமுற்றைக் கொண்டு முடிந்தால் அது வினையெச்சம்.

இ) முற்றுப் பெறாத வினைச்சொற்கள் வேறொரு வினைமுற்றைக் கொண்டு முடிந்தால் அது பெயரெச்சம்.

ஈ) முற்றுப் பெறாத வினைச்சொற்கள் வேறொரு வினைமுற்றைக் கொண்டு முடிந்தால் அது முற்றெச்சம்.

**பிரிவு: ஈ இலக்கியம்/தமிழ்ப் பாடநூல் - 36 மதிப்பெண்கள்**

XI. **கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும்.** [5X1=5]

வள்ளலார், இறைவன் ஒருவனே; அவன் ஒளி வடிவினன் என்பதனையும் அருட்பெருஞ்சோதியாக விளங்கும் இறைவனை அடைவதற்குத் தனிப் பெருங்கருணையே கருவி என்பதையும் உலகோர்க்கு உணர்த்த சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தினை வடலூரில் நிறுவினார். சாதி, மத, சமய, இன வேறுபாடு கூடாது; எவ்வுயிரையும் கொல்லலாகாது; புலால் புசித்தல் கூடாது; எல்லா உயிர்களையும் தம்முயிர் போல் எண்ணுதல் வேண்டும்; ஏழை மக்களின் பசியைப் போக்குதல் வேண்டும்; உலக மக்கள் அனைவரையும் உடன்பிறப்புகளாய் நேசித்தல் வேண்டும் என்பன இச்சங்கத்தின் நோக்கங்களாம்.

**வினாக்கள்**

1. இறைவன் எத்தகைய வடிவினன்?
2. இறைவனை அடைய உதவும் கருவி எது?
3. வள்ளலார் எத்தகைய வேறுபாடு கூடாது என்றார்?
4. யாருடைய பசியினைப் போக்குதல் வேண்டும் என்று வள்ளலார் கூறுகிறார்?

5. வடலூரில் வள்ளலார் நிறுவிய சங்கத்தின் பெயர்?

**XII. கீழ் வரும் பாடல் வரிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்க.** [4X1=4]

சீக்கிரம் செல்லுக நேர்வழியில் – அதைச்
செத்தைகள் கூடியே தூர்க்கு முன்னே
நோக்கிய அத்திசை நேர்த்திசையில் – துளிச்
சோம்பலுமின்றி நடை எடுநீ
கால்கள் இரண்டு படைத்தவன்நீ – பெருங்
கல்லும் மலையும் கடப்பதற்கே
மேலிரு கைகள் அவைகளுண்டே – அங்கு
விம்மும் புதர்கள் அறுப்பதற்கே.

வினாக்கள்

1. இப்பாடலை இயற்றியவர் யார்?

அ) உமறுப்புலவர் ஆ) குலசேகர ஆழ்வார்

இ) சாலை இளந்திரையன் ஈ) பாரதிதாசன்

2. நேர் வழியை எவை தூர்க்கும்?

அ) சேற்றுநீர் ஆ) செத்தைகள்

இ) கற்கள் ஈ) மணல்மேடுகள்

3. கால்கள் படைத்தன் பயன் யாது?

அ) அடுத்தவரை உதைக்க ஆ) கல்லும் மலையும் கடக்க

இ) தொழில் செய்ய ஈ) பயனேதுமில்லை

4. புதர்கள் அறுப்பதற்கு எவை பயன்படும்?

அ) கண்கள் ஆ) கால்கள்

இ) கைகள் ஈ) அறிவு

**XIII. பின்வரும் குறட்பாக்களில் உள்ள கோடிட்ட இடங்களைச் சரியான சொற்களால் நிரப்புக. (இரண்டிற்கும் விடையளி)** [4X½=2]

அ) அழுக்கா றுடையாங்கண் _____________ றில்லை
ஒழுக்கம் _____________ உயர்வு.

ஆ) அறனீனும் ___________ ஈனும் திறனறிந்து
___________ வந்த பொருள்.

**XIV. விடையளிக்க** (ஏதேனும் **இரண்டனுக்கு** மட்டும்) [2X4=8]

அ) பெரியாரைத் துணையாகக் கொள்வது குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

ஆ) மாணிக்கவாசகர் இறைவனிடம் எவ்வாறு வேண்டுகிறார்?

இ) கங்கையின் மறுகரை அடைந்த குகனிடம் இராமன் கூறியவற்றைத் தொகுத்தெழுதுக.

ஈ) குலசேகர ஆழ்வார் பற்றிக் குறிப்பு எழுதுக.

உ) வாழ்க்கையில் அனைவரும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் பற்றி கலித்தொகை பாடல் கூறுவனவற்றை தொகுத்து எழுதுக.

**XV. விரிவான விடையளி:-** (ஏதேனும் **இரண்டனுக்கு** மட்டும்) [2X5=10]

அ) செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாடுகளை விளக்கி எழுதுக.

ஆ) மேடைப்பேச்சின் கூறுகளை எழுதுக.

இ) தமிழரின் மருத்துவ அறிவு குறித்துக் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

ஈ) இராமலிங்கர் இளமையிலேயே சொற்பொழிவாற்றும் திறன் பெற்றிருந்தமையை விளக்குக.

உ) கலை அறிவியல் கல்வி, சிறுதொழில் கல்வி குறித்து எழுதுக.

**XVI. கதைப் பகுதி - விரிவான விடையளி:-** (ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும்) [1X7=7]

அ) குறட்டை ஒலி கதையில் வரும் இருவேறு குடும்பங்களின் இயல்பினை விளக்குக.

ஆ) அகழ்வாய்வு குறித்த செய்திகளைத் தொகுத்தெழுதுக.

இ) பரிதிமாற்கலைஞரின் தமிழ்த் தொண்டினை விவரிக்க.